# THE MORNING STAR.

Vol. 59. Jaffna, Thursday 5th of Jan., 1899. No. 1.

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

*RECEIPTS FOR THE MORNING STAR*

| | | |
|---|---|---|
| Colombo | Messrs. A. M. Chitrambalam and N. Samuel | 8.00 |
| Jaffna Town | Messrs A. Krishner, E. Lebbe, and Vallipuram, Nathaniel, Valuppillai and Proctor Sivacolunthu | 9.25 |
| Manippay | Mr. J. Backus | 5.00 |
| Navaly | Rev. R. Bryant and Mr. D. P. Adams | 2.00 |
| Penang | Mr, A. Muhamed Sultan Maraicar | 5.00 |
| Pandaterruppu | Rev. D. Valupilly Notary Seenivasagam [illegible] | 7.50 |
| Araly | Messrs. Buel and Elyatamby | 2.60 |
| Nunavil | Rev.S. Abraham and E. [illegible] | 2.50 |
| Varany | Mr. S. A. Seevoratnam, P. [illegible] H. [illegible] V. [illegible] N. [illegible] C. [illegible] | 7 50 |
| Moolay | Messrs Charles Murugasu, T. Paramasamy, and A, Tiagarasapilly | 7.50 |

THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The Company's Steamer "Lady Havelock" is appointed to sail from Jaffna to Colombo Via Paumben on Jan. 11th. "

W. MATHER & SON, Agents

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

Bankers and Commission Agents.

The company opens current accounts with sums of not less than Rs 100 00 and interest allowed at 2 per cent per annum on minimum monthly balances of Rs 500.00 and upwards. Fixed deposits received for 3. 6 and 12 months and interest allowed at 3, 5 and 6 per cent per annum respectively.

Remittances both by Wire and Draft made to and from Colombo Colombo Bankers-National Bank of India Ltd.

Cheques and Foreign drafts and bill of exchange on the Colombo Banks cashed.

For sale at the Store Department

Grey shirtings. Mulls, Jacconettes, Chintz of different kinds, Umbrellas. Hosiery. Boots, Shoes and Harness. Waterbury watches, Printing paper, Swans Fountain Pens &c &c.

WILLIAM MATHER.
Managing Director

POST OFFICE NOTICE.

The Catamaram mail service between Kankasanturai and point Calimere will cease temporarily from the 10th proximo untill further notice owing to the prevalence of plague in India.

Correspondence for India will be forwarded via Colombo, Tuticorin-

F. W. Vane,
Asst. Postmaster Generla.

FOR SALE.

Dictionaries
Atlases
Drawing Pen
School and
College Text Books

Apply to the
Manager "Morning Star"
Batticotta, Jaffna.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } No 940.

Arampar Venasitamby of Vempodukeny. Petitioner.

Vs

1, Valliammai wife of Venasitamby of Vempodukeny
2, Chinnachy widow of Varitamby Chinnatamby of Allalai
3. Letchumy widow of Kanthavanam of Meesalai.

Respondents.

This matter of the Petition of Arampar Vinasitamby of Vanpodukeny praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Varitamby Chinnatamby of Allalai coming on for disposal before C. Eardly Wilmot Esquire, District Judge, on the 8th day of December 1898 in the presence of Mr. Thambiah. S. Cooke Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 25th November 1898, having been read, it is declared that the Petitioner is the next of kin of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondents or any other person shall on or before the 24th day of January 1899 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 8th day of December 1898. | Signed C. Eardley WILMOT, District Judge.

## Local & General.

**Weather.** The past three weeks have given us considerable rain as we thought they would. December tho generally not having so heavy a rain fall as either October or November, is nevertheless a rainy month, and the past month has been no exception to the rule. The bright pleasant days of early December were followed by the showery days of the past three weeks. During the Christmas holidays the rains were heavier and it seemed as if the clouds would never break. As a consequence Batticotta registered 16 04 inches and Udupiddi 12. 10inches which cannot be said to be abnormal. The total rainfall for the year in Batticotta was 62.69 inches and in Udupiddi. 56.62.

The rains are about over now and we look for pleasant weather and a fair wind for the next fortnight.

**Health.** The health of the Peninsula is very unsatisfactory, fever prevailing to an alarming extent. The death rate must be higher than usual for we hear of numbers succumbing to the disease on every hand. In some instances death follows the attack so soon that it seems to indicate a virulent type of fever. Measles also prevail in some parts of the peninsula. The hospitals are full, and the Govt. is distributing quinine doses through the headmen. We hope that the strictest watch will be kept of our seaboard, and that cholera and plague will not be introduced into our Peninsula through the carelessness of the authorities.

**Missionaries.** Mr. and Mrs Trimmer and family have been spending a few days at the seaside bungalow at Uricardu. Mr. and Mrs. Carter and family are there now for a week or two. Mr. Garrett and family are at Point Pedro for a few weeks. Mr Horsley and Miss. Case left on Monday for Colombo to attend Synod and the Wesleyan Missionaries and Pastors are leaving this week for Trincomalie to attend the anuual conference of the North and East Ceylon district.

**Lyrical Preacher.** We have received a copy of this little Lyric book composed and edited by Mr John I Christmas, B. A., of Salem, son of Rev. J. Christmas of Tellipally. It contains 30 Lyrics suitable for evangelistic meetings, and will undoubtedly be of real service to every one desirous of proclaiming the Gospel of Christ. The price is 18 cents, or 9 cents to bona-fide preachers We shall be glad to order copies for any desirous of procuring them.

**Poems by J. R. Arnold Esq** Our thanks are due to the sons of the late Mr. Arnold for copies of some of his later poems. They are [illegible], [illegible], and [illegible], two of them issued at the press of Strong and Asbury and one in town. They will be greatly appreciated by all classical scholars, as well as be useful in turning the attention of men to higher things In the preface of one of the books Mr. Arnold says that after his severe illness in 1880 "we employed some of our leisure hours for the preparation of a few poems, auxiliary to our postponed journey and serviceable for prayer and meditation."

**Almanac and Calendar** Our hearty thanks to the Govt Printer for a copy of his Almanac and Calendar for 1899 which as usual is very complete containing a large amount of valuable information.

**Jaffna F. N. S. Hospital** Mr.Charles Dutton of Uduvil has been appointed on three months probation as Dresser at the Hospital. Mr. Dutton is an undergraduate of the Madras Medical College and has served several years under Drs. Marston and Scott. The widow of the late Mr. Kandavanam has been allowed by the committee an allowance of Rs. 10 per month tenable for two years.

**Wesleyan Mission District Synod.** The meeting of the Synod will be held at Trincomalie, and the ministers from Jaffna leave tomorrow for Trincomalie by land as no steamer is available.

**Criminal.** Murder of a very shocking character was committed at Kankasanturai on the 25th ultimo. A girl of about 12 years of age was the unfortunate victim. She was taken hold of in a palmyrah garden, brutally illtreated by four men who to screen their beastly act eventually murdered her. Messrs. Bartlett and Tranchell proceeded to Kankasanturi the next day to hold the inquiry and three of the men were arrested.

**Jaffna Railway.** Much opposition has been made in some quarters to the extension of the line Northwards ever since the subject was initiated. The antagonistic tendency has not yet closed even when it is now too late and indiscreet to do so. The London Chamber of Commerce seem to have now taken on hand the subject and a deputation from the Chamber will meet the Secretary of State to express their disapproval of the sanction of the extention northwards.

**Jaffna Town Union.** The Directors of the "Jaffna Town Union" have arranged for a public demonstration when the Y. M. C. A. rooms at the 1st cross street will be opened to the members. The date has been fixed for the end of the month of which due notice will be given.

**Civil Service.** By a recent minute of the Government published in the Gazette of the 16th ultimo it is required that all Police Magistrates, not members of the Civil Service or of the Bar, should pass an examination in the Ceylon Penal Code, Criminal Procedure Code and the Evidence Act within nine months of their appointment. Failure to pass will involve a cancellation of their appointment, but the Governor if he thinks fit, may extend the period for a further term of six months. It has also been notified that one Cadetship in the Lower Division of the Civil Service will be offered for competition in June 1899.

**Plague Precautions.** The Government Agent Mr. Ievers and Dr. Thornhill made a special visit lately to Kaits and the other islands and gave strict orders for the prevention of landing any passenger from the Indian coasts in any other place than those specially appointed for the purpose. Arrangements have also been made by them to accommodate passengers who will be put under quarantine. Watch boats will ply along the western coast to detect landing of any persons by stealth.

**Sport.** A match of cricket was played on the 3rd inst in the Esplanade by the local police club on one side and the other side was formed of a few European visitors and a few of the numbers of the Jaffna cricket clubs.

**Rev. T. S. Smith** A recent mail brought tidings that Mr. Smith was far from well. We hoped to hear that he was recovering but the last mail brings the news that after careful examination some of the most skilled Surgeons of America have given that he is suffering from cancer of the liver and that no treatment will avail to spare his life beyond a few months. This news will be a keen blow to his many friends in Jaffna who seeing him go on furlough apparently in good health were looking forward to his return at an early date.

**Fevers.** The question is constantly being asked What is the cause of so much fever? The answer is expressed in three words—"bad well water." The reason why the wells are in a worse condition than in other years lies in the fact that when the rainy season began it was ushered in by a sudden downfall of rain. The impurities of the air and the refuse matter lying about instead of soaking into the ground was carried quickly by streams into the wells and tanks. The germs of malarial fever and typhoid fever are thus being taken into the system continually through impure water. Economy or what passes for economy, prevents the public from emptying the wells. It will cost a few cents more to clean the wells while they are full of water but this is worth while it days of idleness, or suffering may be averted. The Govt. has recommended people to boil the water, a very excellent but fearfully neglected counsol. Quinine is also given gratis by Govt. but in the hands of the native quacks is much abused. It is of little use to give quinine while the fever is on. After the first attack, to prevent its return give for an adult a ten grain dose as soon as the fever leaves, repeating a five grain dose every fourth hour, stopping if fever rises. The most of these cases may be cured in three or four days. Foolish people, only want medicine when they are suffering from fever, neglecting it when fever subsides. This is the most likely cause of a protracted illness. The food given is also very deficient in nourishing properties. Rice *congee* possesses little nutriment. Milk is the best food, as it is nourishing and easily digested.

**Mission Hospitals.** The in patients in the Manepay and Inuvil Hospitals average about 80 patients daily. Besides these an equal number are treated daily as out-door patients. It was doubtless an oversight that in the report of the Medical Department for the Northern Province for 1897. no reference was made to the existence of such institutions. We presume the error will not be made for 1898 The Hospital at Manepay has been open to the public now for five years and owing to new buildings being erected increased accommodation has been given from year to year. It is doubtless true the report of the medical work for the Northern Province is intended to show what is being done by Govt. In as much as the Govt. subsidizes the Friend in Need Society Hospital reference to it was quite in place. But when it is argued that a Hospital with accommodation for 50 patients is needed at Batticotta, it is only stating part of the case if the existence of one Hospital capable of accommodating even more than 50 patients but five miles distant, and of another with almost equal capacity but eight miles distant is not referred to. That increased Hospital accommodation for patients is needed in the Northern Province we quite believe and further we think that a Hospital of the capacity suggested is urgently needed in the Chavagacherry district or perhaps at Point Pedro, although the existence of a Hospital at the latter place gives the preference to the former. Perhaps what is as urgently needed as Hospitals is some Govt. regulation as to who should be allowed to practice medicine. The practitioner who uses native medicines is as a rule very unskilled, and entirely empirical, in his methods. But perhaps more to be dreaded than he is the young man who with the merest smattering of knowledge uses drugs popularly called English medicine. The utter disregard for proper use of the drug or the proper dose under different circumstances works untold mischief.

## GENERAL NOTES.

**Restoring spoiled pens** When a pen has been used until it appears to be spoiled place it over a flame for a quarter of a minute, then dip it into water and it will be again fit for work.

**Magnificent casket.** The Burmese are sending a casket to Kandy for enclosing the sacred tooth of Buddha. The casket is of pure gold, standing 28 inches high, shaped and entwined with wreaths studded with diamonds, emeralds, and rubies, the apex being a large ruby valued at Rs. 14, 100 which sustains a huge diamond pendant. The casket alone is valued at one lac of rupees.

*Cey: Observer*

**Grooming horses by electricity.** The electric current is now applied to operating horse grooming machinery, less than three minutes being sufficient for going over an animal.

**The British & Foreign Bible Society.** At the last Annual meeting of this society it was stated that the circulation of Bibles, Testaments and portions of Scripure in the past year had reached the record total of over t,387,000 copies an increase of more than 600,000 copies o4ver the previous year and 181,120 beyond the largest tota eover announced at any previous anniversary.

# உ தய தா ர கை .

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௫௯ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௲அ௱௯௰௯ம் ௵ தை ௴ ௰௯ வியாழக்கிழமை. [சங்கியை, ௧



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனி (லிமிற்றெட்)

"லேடிஅவலக்" புகைக்கப்பல் பின்வரும் தேதிகளில யாழ்ப்பாணத்திலிருந்து பாம்பன்வழியாய்க் கொழும்புக்குப்போக இருக்கின்றது. 1899 ம் ௵ தை ௴ 11 ௳, புதன் பின்.

W[m] MATHER, & SON. Agents.

## யாழ்ப்பாண வியாபார சமுதாயம்.

இச்சமுதாயத்தவரிடம் பின்னுற் சொல்லப்படும் சாமான்கள் விற்பனவுக்கிருக்கின்றன.

சட்டைகள் தொப்பிகள் ரவிக்கைகளுக்கேற்றதும், பலவித பூக்களுள்ளதுமான நேர்த்தியான வெல்வெற்.

வெள்ளை, பச்சை, ரோசாப்பூ நிறங்கொண்ட உயர்ந்த பட்டுவகைகள்.

ஆண்கள் பெண்களுக்கேற்ற கால்மேசு சப்பாத்துகள்.

சட்டைகளுக்கேற்றமுதற்றரமானகன்னனூர்ச்சீலைகள்.

காரிக்கன், சல்லைமல், கோடிமல், என்னும் பலநிறப்புடவைகள்.

நேர்த்தியான சித்தைப்புடைவைகள்.

வாட்டர்பரி, நாழிகைவட்டக்கள். வெள்ளை உட்சட்டைகள். வனியன்சட்டைகள்.

வெள்ளைச் சரிகைச்சேலைகள், பலதினுசான சரிகைச்சால்வைகள்.

கடதாசி, பேனை, பென்சில், மைமுதலிய எழுத்துச்சாதனங்கள்.

## மகாபாரதவுரை.

### சபாபருவம்.

இது விளம்பி ௵ கார்த்திகை ௴ முதல், மாசந்தோறுஞ் சங்கியையாக விற்றுவருகின்றோம்.

சங்கியை க தபாற்செலவுடன் சதம், 28.

ஆதிபருவஉரை உரையாசிரியர் படத்தோடு ரூ. ௯.

இங்ஙனம், வை. சுப்பிரமணியபிள்ளை.

விவேகானந்த யந்திரசாலை, மானேச்சர்.

## புத்தக விளம்பரம்.

Works by the late Mr. J. R. Arnold,

இப்பத்திரிகைக்கு ஏறக்குறைய நாற்பது வருஷங்களாகத் தமிழ்ப்பத்திராதிபராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீ மத். அ. சதாசிவம்பிள்ளை அவர்களால் (J. R. Arnold) இயற்றப்பட்டு நவமாய்ப் பிரசுரிக்கப்பட்ட பின்வரும் புத்தகங்கள் விற்பனவுக்கு ஆயத்தமாயிருக்கின்றது.

| | | |
|---|---|---|
| பஞ்சரத்தினம் | விலை சதம், | உ௫ |
| ஞானவெண்பா | " | ௧உ |
| சுகமாணுபீஷ்டம் | " | ௧அ |
| தபாற்செலவு | " | உ |

முன் பிரசுரிக்கப்பட்டவற்றுள் இப்போது விற்கப்படுவன.

| | | | |
|---|---|---|---|
| பாவலர்சரித்திரதீபகம் விலை, | ரூ. ௧ | ச. | ௫0 |
| நன்னெறிக்கதாசங்கிரகம் " | " | ௧ " | ௧உ |
| குடும்பதருப்பணம் | " | " | ௫0 |
| இல்லறநொண்டி | " | " | ௬0 |
| கீர்த்தனசங்கிரகம் | " | " | உ௫ |
| வெல்லையந்தாதி | " | " | ௪0 |
| இவற்றிற்குத் தபாற்செலவு முறையே | | " | ௧0-௫ |

உ-உ-உ-உ. பிரியமுள்ளோர் கிரயமனுப்பிப்பெற்றுக்கொள்க.

S. T. Arnold.
Proctor, Manippay.

2, January. 1899.


## உ தய தா ர கை .

### ௲அ௱௯௰௯ம் ௵ தை ௴ ௰௯.

### புதுவருடம்.
### The New Year.

சுகபெலமுள்ளவர்களாய் விக்கினமின்றி ஓராண்டைக்கழித்து அகமகிழ்வோடு பின்னோராண்டைக்காணும்படி அனுக்கிரகம்புரிந்த கிருபாசமுத்திரமாகிய எம்பெருமானுக்கு முதலாவதாய் ஸ்தோத்திரஞ்செலுத்தி இரண்டாவதாய் எம்பத்திராபிமானிகள் நல்லுபகாரிகள் யாவர்க்கும் நத்தார்ச்சந்தோஷத்தோடு புதுவருடசுபசோபன வந்தனங் கூறுகின்றோம்.

௧அ௯௯ ம் ஆண்டின் சீர்நிருவாகங்களெப்படியாயிருக்குமெனச் சோதிடம்பார்த்து வருடபலன் கணிப்பார் பலர். ஐரோப்பிய ராச்சியங்களிற் பெரும் யுத்தங்களும் கலகங்களுமுண்டாகுமென்பது கிரகநிலைகளைக் கவனித்து வருடபலன்கூறுஞ் சோதிடர்துணிபு. வரும் கார்த்திகைமாதம் ௧௩ ந் திகதி வால்வெள்ளியொன்று பூமியில் முட்ட அது சில்லபொல்லங்களாயுடைந்து நெருப்புப்பற்றியெரிந்து கரிந்துபோமென்றார் றுடோல்வ்வோல்ப் (Prof. Rudolph Falb) என்னும் ஐரோப்பியசாஸ்திரியொருவர். இந்திய கணிதப்படி அத்திகதி கலியுகவருஷம் ௫௦௦௧. விகாரி வருஷம் ஐப்பசிமாதம் உ௯ ந் திகதி திங்கட்கிழமை வளர்பிறை ஏகாதசி சதயநட்சத்திரமாகுமாம். அத்தினத்தையடுத்துச் சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி, இராகு இவைகள் ஒருமித்து விருச்சிகவீட்டிலிருக்க எதிர்வீட்டிற்குக்கொஞ்சம்விலகிப் பூமியும் கேதுவுமிருக்குமாம். அடுத்த புதன்கிழமை கிரகங்கள் யாவற்றேடுஞ் சந்திரனுஞ்சேர்ந்து ஒரேநிரைக்கிருக்கும் அபூர்வகாட்சியுண்டாம். சென்றகார்த்திகைதுவங்கி வருங்கார்த்திகைவரைக்கும் பெரும்புரட்சிக்குரிய கஷ்டகாலமென்றார் நம்மூர்ச்சாஸ்திரியாரொருவர். ஐயகோ!

சோதிடர்கூற்றிவ்வாறுயினுந் தற்போதுள்ளகாரிய நிருவாகங்களையுற்றுநோக்குமிடத்து இவ்வருடம்பொதுவாய்ச் சந்தோஷக்குறிகளுடனேயே ஆரம்பிக்கின்றதென்போம். ஸ்பானிய அமரிக்கர் தம்முளொத்துச் சமாதான ஒழுங்குகள்செய்துகொண்டதும்,சீனவின்விஷயத்திலும எகிப்தியசூடன் விஷயத்திலும நடைபெற்ற காரியங்களினுல் ஐரோப்பியதத்துவஅரசினர்க்குள் ஓர் பெரும் யுத்தங் கிளம்புமோவென யாம்கொண்டபயமொருவாறு நீங்கியிருப்பதும் புதுவருடம்பொதுப்படச் சமாதானகாலமாயிருக்குமெனக்கூறற்கேதுக்களாயிருக்கின்றன. தத்துவஅரசினர் தத்தம் யுத்தஎத்தனங்களை அதிகப்படுத்துகின்றார்களெனில்,அதுவும் யோசனையின்றி அரசர்கள் யுத்தந் துவங்காது தடுக்கும்ஏதுவாயிருக்குமெனக்கூறலாம். தனித்தநிலையிலிருநத அங்கிலேயரோடு அமரிக்கர் நல்லிணக்கமுள்ளவர்களானதும் மற்றும் அரசர்கள் முட்டாட்தனமாய்ச் சண்டைக்குக்கிளம்பாதஎச்சரிக்கையாய்நடத்தற்குக் காரணமாகுமென்பதில் மயக்கமில்லை. சீர்திருநதாத தேசங்களாய்ப் பெலவீனநிலையிலிருக்கும் சீனை,ஆபிரிக்காதேசங்கள் ஐரோப்பிய அரசினர்கைப்படுங்கால் முற்காலங்களில்நடைபெற்றபெரும்யுத்தங்களிற்போல அதிக இரத்தஞ்சிந்துதலின்றிக் கூடியஅளவுசமாதானமேரையாகவே பங்கிடப்படுமெனக் கூறலாம். விசேஷலட்சணங்கள் பொருந்தியவரானபுதியதேசாதிபதியின்வருகையோடு இந்தியாவும் கலகம் பஞ்சம் கொள்ளைநோயென்பவற்றின் மூர்க்கந்தணிந்து முந்திய வருடங்களிலும்பார்க்க உத்தமநிலைமையையடையுமெனக்கூறப் பின்னில்லோம்.

இனி நந்தேசமாகியஇலங்கைத்தீவையெடுத்துப்பார்க்குமிடத்தும் இவ்வருடஞ் சந்தோஷ சமாசாரங்களுடனேயே யாரம்பிக்கின்றதென்பது தெளிவாயிருக்கின்றது. மகத்துவந்தங்கியதேசாதிபதி சேர் உவெஸ்ற் றிட்சவே அவர்களின்கீழாய் இலங்கையின் அரசிறைவருமானம் மேலும்மேலும் அதிகரித்துவருவதும், கிளேறிக்கல்உத்தியோகமாதியவற்றிற்செய்யப்பட்ட புதியஒழுங்குகளும்,பென்னித்தபால்ஸ்தாபனமானதும், நம்தேசம் பெருநன்மைகளையடைதற்கான ஏதுக்களாயிருக்கின்றன. தோட்டத்துரைமார் சிலர் எதிரிடைசெய்துங் கவனியாது இலங்கையின் வடபாகத்தையூடறுத்துப் புகைவீதிதிறத்தற்குத் தேசாதிபதியவர்கள் தீர்மானஞ்செய்தது இலங்கை முழுவதுக்கும் விசேஷமாய் யாழ்ப்பாணத்துக்குப் பெருநன்மையாகும். கொள்ளைநோய்க்கெதிராய்ச்செய்யப்பட்டிருக்குங்கடும்பிரமாணங்களும், தேசாதிபதியவர்களும் அவரின்கீழிருக்கு முத்தியோகஸதரு மிதுவிஷயத்திற் கொண்டிருககும்விளிப்பும், அந்நோய் இத்தீவில் அதிகெடுதிசெய்யமாட்டாதென ஏறக்குறைய நிச்சயநம்பிக்கையோடிருக்கச்செய்கின்றன. முந்திய பலவருடங்களிலும்பார்க்க இவ்வருடம்யாழ்ப்பாணத்தில்நெல்வேளாண்மைமிகத்திறமாயிருப்பதும், புகைவீதிவேலையாரம்பித்தற்கான ஆயத்தங்கள்நடைபெறுவதும், பெண்கள் சிறுபிள்ளைகளின் பரிகரிப்புக்காய் இணுவில் ஆசுப்பத்திரிவெகுபிரபலியமாய்நடைபெறுவதும்,மானிப்பாய் ஆஸ்பத்திரி விசாலமாக்கப்பெற்று அரும்பெரும் வைத்தியசிகிச்சைகள் நடைபெறுவதும் யாழ்ப்பாணிகள் அதி சந்தோஷமடைதற்கான சாரணங்களாயிருக்கின்றன. ஆகையால் நம் பத்திராபிமானிகட்கு இரண்டாம்முறையுஞ் சுபசோபன புதுவருடவந்தனம் அதிசோபித மகிழ்வோடு தந்தனம்.

### பழையவருட சம்பவசங்கிரகம்.
### Review of the Year 1898.

ஓர்வருடப் பிரயாணத்தைச் செய்துமுடித்துப் பின்னோர்வருட எல்லைக்குட்கால்வைக்கும்போது நாம் கழித்துவிட்ட வருடத்திற் சந்தித்த விசேஷங்களெவையென ஒருமுறை பின்னேக்கித் திரும்பிப்பார்ப்பது குற்றமன்றுகையாற் சென்றவருடத்தில் நடைபெற்ற விசேஷசம்பவங்களை வழமைபோலச் சங்கிரகித்து நம் பத்திராபிமானிகளின்நயத்திற்கா யிவ்விடந் தருகின்றோம்.

முதலாவதாய் நம்மிருப்பிடமாகிய யாழ்ப்பாணத்தையுற்றுநோக்குமிடத்து, மழையின்மையால் நெல்வேளாண்மையில்லாதுபோயுஞ் சிறுதானியஞ் செழிப்பாக்கியதும், வருட ஆரம்பத்திலே யுண்டுபட்ட பேதிநோய் அதி கெந்திசெய்யாது நீங்கியதும், பலவருடங்களாய் ஊர்காவற்றுறை நீதாசனத்திற் பொலிந்துவிளங்கிய மெஸ். கு. கதிரைவேற்பிள்ளையவர்களைப்பாற, அவருக்காய் அவரது மருகர் பிறக்தர் சிவப்பிரகாசம் மூன்றுமாதம் கடமைபார்த்ததும், பின் மெஸ். தம்புஅவர்கள் அவ்விடத்தில் அயிட்டிங்காய் நியமிக்கப்பட்டுத் துட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ்செய்ததும், பின் மெஸ். உவுட்டேஷ நிலையாய் நியமிக்கப்பட்டதும், டிஸ்திறிக்நீதவான் மெஸ். கோட்டன் மாறிச்செல்ல மெஸ். உவில்மற் அவ்விடத்தில் நியமனமானதும், யாழ்ப்பாணப்பொலிஸகோட்டுக்கு மெஸ். கொன்ஸ்தந்தீன் நியமனமாகிப் பின் மன்னூர்செல்ல, மெஸ். பாட்லெற் அவ்விடத்துக்கு வந்ததும், சாவகச்சேரிக்கோட்டிலிருந்த மெஸ். காசிச்செட்டி உத்தியோகமுயர்ந்துசெல்ல, அப்புக்காத்துக்கனகசபை சிலகாலம்நீதிசெலுத்தியபின் மெஸ். அளகைக்கோன் நியமனமானதும், டக்தர் தோண்கில் லீவிற் சென்றிருந்த சிலமாசங்களாய் டக்தர் சந்தியாகு வடமாகாண வைத்தியத்தலைமைநடாத்தியதும், ஆபத்துக்குதவி வைத்தியசாலையிலிருந்த டக்தர் கிறனியர் உத்தியோகமுயர்ந்துசெல்ல, டக்தர் ராசசிங்கம் அவ்விடத்தில் நியமனமானதும், பிறக்தர் பிறவுன் சின்னத்தம்பி, டக்தர் கந்தவனம், டக்தர் அரசர்கோன்முதலியார், மிஸ்ஸிஸ் கென்ஸ்மன், கனம் அஸ்பரிப்போதகர், மெஸ். உவில்லியம் துவைனம் ஆதியோர் காலஞ்சென்றதும், இணுவில் ஆஸ்பத்திரிவேலை ஆரம்பித்ததும், ஸ்திரிசோரவழக்கொன்று சுப்பிரீங்கோட்டில் அநிகலாதியாய் விளங்கப்பட்டுத் தள்ளப்பட்டதும், அதனோடடுத்துக் கள்ளச்சதியவழக்குத் துவங்கியதும், மானிப்பாய்க்குத் தந்தித்தபாற்கம்பி நீட்டப்பட்டதும், வடலங்கை ஒய்வுநாட்பாடசாலை ஐக்கியசங்கம், சிதாரி வாலிபர்சங்கமென்பன ஸ்தாபகமாயதும், ஈங்கு நடைபெற்ற விசேஷசம்பவங்களாகும்.

இலங்கை முழுவதையுமாராயுமிடத்து, தேசாதிபதியவர்களின் விருப்பப்படி வடக்கைநோக்கிப் புகைவீதி திறத்தற்கு இராசமாலிகிதர் உத்தரவளித்ததும், இலங்கைத் தோட்டத்துரைமார் சிலர் திரண்டு இவ்வெடுப்புக்கெதிரிடைகாட்டியதும், களனிப்பள்ளத்தாக்குப் புகைவீதிக்கும் உத்தரவு கொடுக்கப்பட்டதும், சட்டநிருபணசங்கத்தின் தமிழர்பிரதிநிதியாய் டக்தர் ரெக்குவுட் நியமனமானதும், அங்கிலேயர் பிரதிநிதியான சேர் யோன் கிறின்லிநறன் இளைப்பாற அவருடையஇடத்தில் மெஸ், உவாக்கர் நியமனமாயதும், வேடமிஷன் வாலிபர்சங்கவிஷயங்களில் அதி கரிசனைகாட்டிய தந்தித்தபாற்தலைவர் மெஸ். உவாக்கர் வேலைவிட்டுச்செல்வதும், வித்தியாகர்த்தர் மெஸ். கல் இளைப்பாற அவரிடத்தில் மெஸ். காவாட் வேலையானதும், தேசாதிபதியவர்கள் கிளேறிக்கல் உத்தியோகத்திற் புதிய ஒழுங்குகளுண்டாக்கியதும், பிறக்தர் குமாரசாமிக்குச் சமாதானநீதவான் என்னுங் கண்ணியமும், மெஸ். சோமனுதர், மெஸ். சந்தியா சந்திரவர்னம் என்பவர்களுக்கு முதலியார்ப்பட்டமுங் கிடைத்ததும், பிரித்தானிய ராச்சியநாடுகளுக்கு ஐந்துசதமுத்திரையோடு (பென்னிமுத்திரை) தபாற் போக்குவரவேற்பாடானதும், கொள்ளைநோயைப்பற்றி அரசாட்சியார் மிக அருட்சிகொண்டு வடபகுதித் துறைமுகங்களிற் சனங்களையிறக்குவதைப்பற்றி மிகக் கடுமையான ஒழுங்குகளுண்டாக்கிக் கூலிச்சனங்களைக் கொழும்பில்மாத்திரமிறக்கக் கட்டளைவிதித்ததும், வவனியா முல்லைத்தீவு என்னுமிருபிரிவுகளு மொன்றாயிணைக்கப்பட்டதும் பிரதானசம்பவங்களாய்க் குறிக்கலாகும்.

வடக்கைநோக்கி இந்தியாதேசத்தை ஆராயுமிடத்து,வருட ஆரம்பத்தில் நடைபெற்ற சூரியகிரகணக்காட்சிபார்க்க அனேக சாஸதிரிகள் வந்ததும், வடமேற்கெல்லையிற் கலகங்களுண்டாக்கிய அபிறிடீஸ்சாதியார் ஆயுதங்களைக் கீழ்வைத்து அங்கிலேயர்க்குக்கீழடங்க, மாட்முல்லாஎன்பவன் திரும்பவுமகுழப்படிகள் துவக்கியடங்கியதும், பேஷ்வார்இந்தூர்என்னுமிடங்களிற் றிச்சங்காரங்கள்நடைபெற்றதும்,சிட்டகோங்கென்னுமிடத்திற் பஞ்சங் காணப்பட்டதும், வங்காளக்குடாவிலோர் சுளிக்காற்றுவீசிக் கப்பல்கள் சிலவற்றைமோசம்பண்ணியதும், திலாக் மறியலிலிருந்து விடுதலையானதும், ரூன்சிற்சிங்கு இநதியாவுக்குவந்து உபசரிக்கப்பெறுவதும், லோட் எல்ஜின் உத்தியோகம் முடித்துச்செல்ல, லோட் கேஷன புதிய பிரதிகாவலராய் நியமனம்பெற்றதும், கற்குத்தாவின் மகாமேற்றிராணியார் யோன்சன்பண்டிதர் உத்தியோகம்விட அவருடைய இடத்தில் உவெல்டன்பண்டிதர் நியமிக்கப்பட்டதும், மார்க்கங்களின் தாரதம்மியவிஷயத்தில் வேயர்பேண்பண்டிதர் உபந்நியாசங்கள் செய்வதும், பஞ்சாப் கற்குத்தாவென்னுமிடங்களுச்குங் கால்வைத்த கொள்ளைநோய் அங்கிருநது அகற்றப்பட்டுச் சென்னைப் பிரதேசத்திற் புகுந்ததும் இத்தேசத்தின் விசேஷங்களாகும்.

பின்னும் அப்பாற்சென்று பிறதேசங்களையாராயுமிடத்து, கிளாட்ஸ்ரேன், பிஸமாக் மந்திரிமார் ஜோர்ச் மூல்லர் ஆகிய மகான்கள் காலஞ்சென்றதும், அவுஸ்திரிய சக்கரவர்த்தினி கொல்லப்பட்டதும், யுகர்தா,ஒருலியோன என்னுமிடங்களிற் கலகமெழும்பி அமர்த்தப்பட்டதும், கியுபாதீவையிட்டு ஸ்பானிய அமரிக்கர் யுத்தம்புரிந்து அமரிக்கர் வெற்றிபெற்றதும், கியுபா, போட்டிறிக்கோ, லாதிரோன், பிலிப்பைனின் தீவுகள் அமரிக்கர்பொறுப்பில் விடப்பட்டதும், அமரிக்கர் சாண்டுவிச் தீவுகளைச்சேர்த்துக்கொண்டதும், பிரான்சியர் மேற்காபிரிக்காவிற் சமோறிநாடு பிடித்ததும், பிரான்சில் டிறேபஸ்வழக்கைப்பற்றிய குழப்படிகள் நிகழ்ந்ததும், தத்துவ அரசினரின் சேனைகள் கிறீற் தீவு சென்று துருக்கியசேனையை அப்புறப்படுத்தினதும், கிரேக்கையின் இராசகுமாரன் பிறின்ஸ ஜோர்ஜ் கிறீற் தீவின் தேசாதிபதியாய் நியமிக்கப்பட்டதும், சூடன் யுத்தத்தில் அங்கிலேயசேனை டேவிஷரை வெற்றிகொண்டதும், அங்கிலேயரின் யுத்த ஆயத்தத்தைக்கண்டு பிரான்சர் பாஷோடாவை விட்டுவிட்டதும், லோட் கிற்செனர் சூடன்தேச தேசாதிபதியானதும்,

னேச்சக்கரவர்த்தியைத்தள்ளித் தாயார் அதிகாரஞ்செய்ததும், மந்திரிமார் மாற்றப்பட்டதும், ஜேர்மனியர் கியோச்சோவிலும், ருஷியர் போட்ஆதரிலும், பிரான்சியர் ஷங்காயிலும், அங்கிலேயர் உவேகாயுவேயிலும் பாளயம்போட்டுக்கொண்டதும், ஜேர்மன்சக்கரவர்த்தி சுலுத்தானைச்சந்தித்துப் பலஸ்தீனாவிற் பிரயாணஞ்செய்துதிரும்பியதும, மேற்கிந்தியதீவில் வீசியபெரும்புயலினால் அதிமோசங்கள்விளைந்ததும், இங்கிலந்தின் நவீனகட்சி பிளவுபட, சேர் உவில்லியம் காக்கோட் தாம் தலைவராயிருக்கமாட்டாரென மறுத்ததும், யுத்தமுஸ்தீதுகளைக் குறைக்கவேண்டுமென ருஷியசக்கரவர்த்தி விடுத்த திருபத்தையுங் கவனியாது எல்லாத் தத்துவஅரசினருந் தத்தம்யுத்தக்கப்பல்களையும் சேனையையும் அதிகப்படுத்தத் தீர்மானித்ததும் சென்றவருட விசேடசம்பவங்களெனலாம்.

## யாழ்ப்பாணம்.

காலநிலை.—Weather.—பத்துப்பன்னிரண்டு நாளாய்ப்பெய்த அடைமழையாற் சனங்கள்பட்ட அவதிகள் மெத்த. இந்தக்கிழமை வெளிப்பாகி வெய்யில் மிகக்காரமாய்விழுகின்றது. இரவிற் பனியதிகம். ஊரிலேகாய்ச்சல் சின்னமுத்தாதியரோகங்களதிகம். ஒவ்வொருநாளும் ஊர்கள்தோறும பிணப்பறைச்சத்தம் கேட்கப்படுகின்றது. காரைதீவு, வட்டுக்கோட்டை, மானிப்பாய், இணுவிலாதியவிடங்களிலுள்ள ஆசுபத்திரிகளில் வந்துநெருங்கும் நோயாளருக்குக் கணக்கில்லை. வட்டுக்கோட்டையிலே நாள்வீதம் நூற்றுக்குமேற்பட்டோர்வந்து மருந்துபெறுகின்றனர்.

சபாசங்கம்.—Ecclesiastical Meeting.—யாழ்ப்பாண அமரிக்கமிஷனுக்குரிய இக்கூட்டம் சென்ற வியாழக்கிழமை உடுவிலில் வைக்கப்பட்டது. சென்றவருடத்திற் புதிதாய்ச் சபையோடுசேர்ந்தோர் தொகை ௮௧. இப்போதிருக்கும் அமரிக்கமிஷன்சபையார் தொகை ௧௯௧௨. ஞானஸ்நானம்பெற்றபிள்ளைகள் அனுசாரிகளையுஞ்சேர்த்து இப்போதுள்ள அமரிக்கமிஷனைச்சேர்ந்த கிறீஸ்தசாகியத்தவர்கள்தொகை ௪000 வரையிலாகின்றது. அமரிக்காவிலிருந்து இவ்வருடத்திலோர்புதியமிஷனரியையும் யாழ்ப்பாணத்திற்கனுப்புகிறதற்கு அங்குள்ளகாரியஸ்தர்தீர்த்திருக்கின்றனர்.

மேஸ். அருணசலம்.—Mr. Arunasalam.—திஜிஸ்றர்ஜெனரல் மெஸ். பொ. அருணசலம் இரண்டோர்கிழமைகளின்முன் யாழ்ப்பாணம்வந்து நொத்தாரிசுமார் தமது சற்றுநிருபத்தை எவ்வளவாய்க்கவனிக்கிறார்களெனப் பரிசோதித்துச்சென்றனர். யாழ்ப்பாண நொத்தாரிசுமார் அவர் கட்டளைகளைச் சிரமேற்கொண்டொப்புக்கொண்டனர். நொத்தாரிசுமார்சிலர் தம்முத்தியோகத்தை அபாவனைசெய்வதைக் கவனித்த நொத்தாரிசொருவர் இப்பிரமாணங்கள் மிகத்தகுந்தவைகளும் நியாயமானவைகளுமெனக் கூறுகின்றனர். மெஸ் அருணசலம் ஒவ்வொரு நொத்தாரிசுக்கு இரு கிளாககுமாருக்குமேற்பட இடங்கொடுக்கவில்லை. மீசாலை நொத்தாரிசொருவர் தாம் வேலையைவிடுவதாய் வாக்களித்தனர்.

கொள்ளைநோய்க் காவல்.—Plague Precaution. வடமாகாணஏசண்டர் மெஸ். ஐவேஷ, டக்தர் தோண்கில்லோடு கூடித் தீவுப்பகுதிகளைத்தரிசித்து ஊர்காவற்றுறையிற் தலைமைக்காரரையுஞ் சனங்களையுங் கூட்டி, கொள்ளைநோய் நம்மூரிற் கால்வையாது தடுத்தற்கு எல்லாருமொத்தசிந்தையினராயுதவி புரியவேண்டுமென்றும், வடகரையிலிருந்துவந்து கள்ளமாயிறங்களத்தனிப்பாரை எட்டத்தில்விட்டுக் கலைத்துத்தாத்தித் தலைமைக்காரருக்குமறிவிக்கவேண்டுமென்றுங்கூறினர். கள்ளமாய்வந்திறங்க எத்தனிக்குந் தோணிகள்படவுகளைப் பிடிப்பதற்காய் இரு புகைவள்ளங்கள் இலங்கைத்தீவின் வடகரையைச்சுற்றியுலாவுகின்றன. முறைமையாய்வருந் தோணிகள் படவுகள் ஒருமுறையில்முப்பதுபேருக்கதிகமாயிறக்கக்கூடாதென்றும், அப்படியிறக்குவோர் பத்துநாளுக்குமேற்படத் தனியானவிடத்தில் மறியல்செய்துபரிசோதனைபண்ணப்பட்டபின்பே ஊருக்குள் விடப்படுவார்களென்றுங் கட்டளைபிறந்திருக்கின்றது.

